# நிர்வாண ஷட்கம்

**मनोबुद्ध्यहङ्कार चित्तानि नाहं**
**न च श्रोत्रजिह्वे न च घ्राणनेत्रे ।**
**न च व्योम भूमिर्न तेजो न वायुः**
**चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥१॥**
மனம் புத்தி அகந்தை நினைவல்ல நான்
செவி நாக்கு நாசி விழியுமல்ல நான்
புவி வெளி காற்று நெருப்புமல்ல நான்
சித்தமானந்த சிவமே நான்
சித்தமானந்த சிவமே நான்

**न च प्राणसंज्ञो न वै पञ्चवायुः**
**न वा सप्तधातुः न वा पञ्चकोशः ।**
**न वाक्पाणिपादं न चोपस्थपायु**
**चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥२॥**
எழுந்திடும்  மூச்சும் ஐந்து பிராணனல்ல
எழுவகை தாதுவும் ஐந்து உறையுமல்ல
வாக்கு கரம் பாதம் பாலுறுப்பு மல்ல
சித்த மானந்த  சிவமே நான்
சித்த மானந்த சிவமே நான்

**न मे द्वेषरागौ न मे लोभमोहौ**
**मदो नैव मे नैव मात्सर्यभावः ।**
**न धर्मो न चार्थो न कामो न मोक्षः**
**चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥३॥**
விருப்பு வெறுப்பு சுயநல மோகமு மல்ல
செருக்கும்  பொறாமையும் நானாக இல்லை
அறம் பொருள் இன்பம் வீடுபேறு மில்லை
சித்த மானந்த  சிவமே நான்
சித்த மானந்த சிவமே  நான்

न पुण्यं न पापं न सौख्यं न दुःखं
न मन्त्रो न तीर्थं न वेदा न यज्ञाः ।
अहं भोजनं नैव भोज्यं न भोक्ता
चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥४॥
புண்ணிய பாப சுகமும் துக்கமு மில்லை
மந்திர தலமும் வேத யாகமும் இல்லை
அனுபவமும் போகமும் அனுபவிப்பவனில்லை
சித்த மானந்த  சிவமே நான்
சித்த மானந்த சிவமே நான்

न मृत्युर्न शङ्का न मे जातिभेदः
पिता नैव मे नैव माता न जन्मः ।
न बन्धुर्न मित्रं गुरुर्नैव शिष्यं
चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥५॥
பந்தமும் விடுதலையும் ஜாதி பேத மில்லை
அன்னையும் தந்தையும் பிறப்பும் எனக்கில்லை
பந்துவும் நண்பனும் குருவும்  சிஷ்ய னில்லை
சித்த மானந்த  சிவமே நான்
சித்த மானந்த சிவமே நான்

अहं निर्विकल्पो निराकाररूपो
विभुत्वाच्च सर्वत्र सर्वेन्द्रियाणाम् ।
न चासङ्गतं नैव मुक्तिर्न मेयः
चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥६॥
மாற்றங்கள் கடந்து மாறாத அருவமே
ஏற்றமுடன் எங்குமே  இந்திரிய ஆளுமையே
தொடர்பும் இல்லை பிரிவும் இல்லை
சித்த மானந்த  சிவமே நான்
சித்த மானந்த சிவமே நான்